**அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - நோர்வே**

# அன்னைத் தமிழ்முற்றம் - 2022

இணையவழி நிகழ்வு – நல்வழி ஒப்பித்தல் - ஆண்டு 4

**காலம்: 08.01.22 அல்லது 09.01.22 - சனி 15.00 அல்லது ஞாயிறு 11.00**

எம்மால் வழங்கப்பட்ட நல்வழிகளில் குறைந்தது ஒன்றினை (1) ஒப்பித்தல் விரும்பத்தக்கது.

## நல்வழி

1. ஒரு நாள் உணவை ஒழி என்றால் ஒழியாய்
இரு நாளுக்கு ஏல் என்றால் ஏலாய் - ஒரு நாளும்
என் நோவு அறியாய் இடும்பை கூர் என் வயிறே!
உன்னோடு வாழ்தல் அரிது. (நல்வழி 11)

*ஒருநாள் உணவை விட்டுவிடு என்றால் விட மறுக்கிறாய். இரண்டு நாட்களுக்கான உணவை ஏற்றுக்கொள் என்றால் ஏற்க மறுக்கிறாய். ஒரு நாள் கூட என் வருத்தத்தை அறிய மாட்டாய். துன்பம் மிகுதியாய் தரும் என் வயிறே, உன்னோடு வாழ்தல் கடினம்.*

2. ஆறிடும் மேடும் மடுவும்போலாம் செல்வம்
மாறிடும் ஏறிடும் மாநிலத்தீர் - சோறிடும்
தண்ணீரும் வாரும் தருமமே சார்பாக
உண்ணீர்மை வீறும் உயர்ந்து. (நல்வழி 32)

*ஆறு வரும் வழியில் உண்டாக்கும் மேடும் பள்ளமும் போல, நம்முடைய செல்வமும் ஒரு நாள் அதிகமாகும் அல்லது குறையும். பூமியில் வாழும் மனிதர்களே இதை உணர்ந்து உங்களிடம் செல்வம் இருக்கும் போதே பசி என்று வந்தவருக்கு அன்னம் இடுங்கள், தாகம் என்று வந்தவருக்கு தண்ணீர் கொடுங்கள், நீங்கள் செய்த தர்மம் உங்களின் தலை காக்கும், அதுவே உங்கள் உயிர் உயரும் உபாயம் ஆகும்.*

3. மரம் பழுத்தால் வௌவாலை வாவென்று கூவி
இரந்தழைப்பார் யாவருமங் கில்லை – சுரந்தமுதம்
கற்றா தரல்போல் கரவாது அளிப்பரேல்
உற்றார் உலகத் தவர். (நல்வழி 29)

*ஒரு மரம் பழுத்தால் அது பறவைகளையோ, மனிதர்களையோ கூவி அழைக்க வேண்டிய அவசியமில்லை, அதுபோல் அமுதசுரபி போல் அடுத்தவருக்கு இல்லை என்று சொல்லாமல் கேட்டதைக் கொடுக்கும் வள்ளல்களுக்கு அனைவருமே உறவினர்*

**08.01.22 சனி அல்லது 09.01.22 ஞாயிறு என்பதை விண்ணப்பபடிவதில் தெரிவு செய்யலாம். தேவையேற்படின் மாற்றம் செய்யப்படும்**

4. ஆற்றங் கரையின் மரமும் அரசு அறிய
வீற்றிருந்த வாழ்வும் விழும் அன்றே – ஏற்றம்
உழுது உண்டு வாழ்வதற்கு ஒப்பு இல்லை கண்டீர்
பழுது உண்டு வேறு ஓர் பணிக்கு. (நல்வழி 12)

*ஆற்றின் கரையிலுள்ள மரம், அரச வாழ்க்கை போகம் ஆகியவை நிலையில்லாமல் அழிந்துவிடும். உழுதுண்டு வாழும் வாழ்வை விட மேலான வாழ்க்கை வேறு ஒன்று இங்கு இல்லை, மற்ற வேலை அனைத்தும் உழவை விட குறைவானவை தான்.*

**08.01.22 சனி அல்லது 09.01.22 ஞாயிறு என்பதை விண்ணப்பபடிவதில் தெரிவு செய்யலாம். தேவையேற்படின் மாற்றம் செய்யப்படும்**